# வானவில்

VAANAVIL
ISSUE – 59 NOVEMBER 2015

இதழ் - 59 கார்த்திகை 2015


# தொழிலாள வர்க்கம் உழைத்துச் சேர்த்த பணத்தைச் சூறையாட மக்கள் விரோத அரசாங்கம் முயற்சி!




இலங்கையில் தற்போது ஆட்சியில் இருக்கும் மைத்திரிபால சிறிசேன — ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம், இவ்வருடம் ஜனவரி 8ஆம் திகதி பதவிக்கு வந்த நாளிலிருந்து தொடர்ச்சியாக பல மக்கள் – விரோத, தேச — விரோத நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

முன்னைய அரசாங்க காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் யாவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. புதிய வேலை வாய்ப்புகள் எதுவும் உருவாக்கப்படவில்லை. வெளிநாடுகள் சிலவற்றுடன் செய்துகொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தங்கள் கௌரவிக்கப்படாமல் ஒருதலைப்பட்சமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

நாட்டின் பொருளாதாரம் அதளபாதாளத்தை நோக்கிச் செல்கின்றது. ஆனால் அதைச் சீர்திருத்த முன்வராத அரசு, தேர்தல்களில் வெற்றி பெறுவதற்காக மக்களை ஏமாற்றும் பொருட்டு சில பொருட்களுக்கு விலைக்குறைப்பு என்ற நாடகத்தை அரங்கேற்றியுள்ளது. கடந்த ஓகஸ்ட் 17ஆம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ஒருமுறை இவ்வாறு செய்யப்பட்டது. தற்போது உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வரவிருப்பதால் அதை மனதில் வைத்து தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்திலும் விலைக்குறைப்பு நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது.

விலைவாசிகள் குறைக்கப்படுவது நல்ல விடயம்தான். ஆனால் அடிப்படையான பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களை வகுக்காமல், வேலை வாய்ப்புகளை உருவாக்காமல், இந்தக் 'கடன் வாங்கிக் கலியாணம்' அவசியந்தானா?

இந்த அரசாங்கத்தைப் பதவிக்குக் கொண்டு வருவதில் முன்னைய அரசாங்கத்தில் வெறுப்புற்றிருந்த தமிழ், முஸ்லிம் மக்களில் கணிசமான ஒரு பகுதியினரும் பங்கு வகித்திருந்தனர். அவர்கள் அவ்வாறு முன்னைய அரசாங்கத்தில் வெறுப்புக் கொண்டதற்குக் காரணம், தமது தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை என்பது காரணமாக இருந்தது. அதன் காரணமாக இன்றைய அரசு அவர்களுக்குப் போலி நம்பிக்கைகளை ஊட்டித் தம்பக்கம் இழுத்தது. ஆனால் அவர்களது உதவியுடன் ஆட்சிக்கு வந்த பின்னர், அவர்களது நிரந்தரமான பிரச்சினைகளுக்கு மட்டுமின்றி, உடனடிப் பிரச்சினைகளுக்கும் கூட எவ்விதமான தீர்வுகளும் காணாது தட்டிக் கழித்து வருகின்றது.

ஆனால் மறுபக்கத்தில், அரசு தனது நீடித்த இருப்புக்குத் தேவையான நடவடிக்கைகளைத் தீவிரமாக எடுத்து வருகிறது.

முன்னைய அரசின் அரசியல்வாதிகள் மீதும், அதிகாரிகள் மீதும் வகைதொகையில்லாமல் வழக்குகளைப் பதிவு செய்து, அவர்களைத் தினசரி விசாரணைக் குழுக்கள் முன்னாலும், நீதிமன்றங்களின் முன்னாலும் இழுத்து நிற்க வைக்கிறது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குடும்பத்தினர் 600இற்கும் மேற்பட்ட குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்டுள்ளனர் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டதிலிருந்து, அரசு என்ன பாதையில் பயணிக்கப் போகின்றது என்பது தெளிவாகியுள்ளது. தனது கையாலாகத்தனத்தை மறைப்பதற்காக அரசு இவ்வாறான தவறான வழிகளில் பயணிக்க முற்படுகின்றது. ஆனால் இது நீண்ட நாளைக்கு மக்களிடம் எடுபடப் போவதில்லை.

மறுபக்கத்தில், ஏகாதிபத்திய சக்திகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக,

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…

# தொடரும் அடாவடித்தனங்கள், அராஜகங்கள்!

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அருகிலுள்ள விடுதியொன்றில் பகல்வேளை சடுதியாக உள்ளே நுழைந்த வாலிபர்கள் குழுவோன்று, அங்கே அறையொன்றில் தங்கியிருந்த வயதுக்கு வந்த ஆணையும் பெண்ணையும் மிரட்டிக் கேள்விக்கு மேல் கேள்விகள் கேட்கிறார்கள். பெண் அந்த வாலிபர்களிடம் 'அண்ணை, அண்ணை' என ஏதேதோ சொல்லி மன்றாடுகிறாள், கதறுகிறாள், தனது ஊரைச் சொல்கிறாள், வீடியோ எடுக்க வேண்டாமெனக் கெஞ்சுகிறாள். அப்போது வாலிபர்களில் ஒருவன் அந்தப் பெண்ணோடு நெருக்கமாக நின்று கொண்டிருக்கும் ஆணின் கன்னத்தில் அறைகிறான். அடி விழுந்த பின்னர் அவன் கன்னத்தை பொத்தியபடி நிற்கிறான். அந்தப் பெண் அடிக்க வேண்டாமென அலறுகிறாள். இவ்வளவு கொடுமைகளும் காணொளியாக Youtube இல் பார்க்கலாம்.

அவுஸ்திரேலியாவின் சிட்னி மாநகரில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் அவர்களுக்கு கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. கூட்டம் நடைபெறவிருந்த மண்டபத்திற்கு வருகை தந்திருந்த சுமந்திரனையும் அவரது துணைவியாரையும் தமிழ்ப்பெடியள் கூட்டமொன்று சூழ்ந்து கொண்டு கேள்விக்கணைகளால் துளைக்கிறார்கள். 'பிரபாகரன் படையணி மீண்டும் மண்ணில் கால் பதிக்கும்' என அந்த மண்டபத்திலுள்ள மேடை மீதேறி ஒருவன் கத்துகிறான். சுமந்திரனை நோக்கி 'துரோகி' எனக் கூச்சலிட்டு, அவரை மண்டபத்தைவிட்டு வெளியேறச் சொல்லி கத்துகிறது அந்தக் கூட்டம். அத்துடன் 2009 இல் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்தது இன அழிப்பல்லவென சுமந்திரன் கூறியதாக அந்தக் கூட்டம் வாதாடுகின்றது. சுமந்திரன் தான் ஒருபோதும் அப்படிக் கூறவில்லையென மறுக்கிறார். எல்லா நிகழ்வுகளையும் பலர் கைத்தொலைபேசி வாயிலாக படம் எடுக்கிறார்கள். தமிழ்க்கைதிகள் இலங்கைச் சிறையில் உண்ணாவிரதம் இருக்கையில் அவுஸ்திரேலியாவிற்கு ஏன் வந்தீர்களென, அவுஸ்திரேலியாவிற்கு புலம்பெயர்ந்தவன் ஒருவன் கேட்கிறான். இந்த காட்சிகள் அனைத்தையும் துண்டு துண்டாக Youtube இல் பார்க்கலாம்.

சென்னையிலிருந்து வெளியாகும் 'ஹிந்து' நாளிதழ் குழுமத்தின் ஆய்வு அமைப்பான, 'அரசியல் மற்றும் பொதுக் கொள்கைக்கான ஹிந்து மையம்' என்ற அமைப்பினால் ,இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளின் எதிர்காலம் குறித்து சென்னையில் கருத்தரங்கு ஒன்று நடந்தது. இந்த கருத்தரங்கு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளக்கூடாது என்று முன்னாள் இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் முன்னாள் மேற்கு வங்காள ஆளுநர், எம்.கே.நாராயணனுக்கு முற்கூட்டியே மிரட்டல் விடுக்கப்பட்டது. அதனைப் பொருட்படுத்தாமல், இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட எம்.கே.நாராயணனுக்கு, 'நீதாண்டா எல்லாத்துக்கும் காரணம்' என்று கூறி தமிழ்நாடு, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவன் செருப்பால் பலமுறை தாக்கியுள்ளான்.

கடந்த சில வாரங்களில் நடந்த இந்த 3 சம்பவங்களும் ஒரு குறுக்கு வெட்டு. இவைகள் இப்போதுள்ள இலங்கை தமிழ் அரசியல் மற்றும் சமூகம் சார்ந்த நிலவரங்கள் எப்படிப் போகின்றது என்பதை தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுவதற்கு போதுமானவை. ஒரு சில ஊடகங்களில் இவைகள் செய்திகளாக வெளிவந்த பொழுதும் நாராயணன் தாக்கப்பட்டதற்கு மாத்திரமே கண்டனங்கள் வெளிவந்தன. கடந்த சில ஆண்டுகளாக 'இலங்கைத்தமிழர் ஆதரவு' என்ற பெயரில் தமிழகத்தில் முடுக்கி விப்பட்டிருக்கும் தீவிரவாதத்திற்கு புலம் பெயர் தமிழர் அமைப்புகளில் சில பின்னணியில் உள்ளன என்ற சந்தேகம் பலர் மத்தியில் நிலவுகின்றது. யாழ் விடுதி மற்றும் சிட்னி காட்சிகள் 'எங்கன்ர பெடியன்களின்' சாகசங்களை நியாயப்படுத்தி பிரச்சாரம் நோக்கிலேயே Youtube இல் பதிவேற்றப்பட்டுள்ளது. சுமந்திரனை மிரட்டியவர்கள் புலம்பெயர் புலி(ப்பெடியன்)களே. தமிழ் தேசியக் கூட்டமைப்போடு இவர்களுக்கு முரண்பாடு கிடையாது, ஆனால் சுமந்திரனோடு மாத்திரமே முரண்பாடு என்பது தெளிவாகத் தெரிகின்றது.

சென்னையிலும் சிட்னியிலும் நடந்தவைகள் 2009 இல் முள்ளிவாய்க்காலில் முடிந்துபோன யுத்தத்துடன் தொடர்புபட்டன. ஆனால் யாழ் விடுதியில் நடந்தது இதிலிருந்து கொஞ்சம் வேறுபட்டது. அதாவது திருமணம் செய்யாமல் ஆணும் பெண்ணும் உறவில் ஈடுபடுவது 'சமுதாயச்சீர்கேடு', அதனை தட்டிக்கேட்க 'பெடியன்கள்' 'தன்னெழுச்சி' கொண்டுவிட்டார்கள் என்ற செய்தியையே இது சொல்ல விழைகின்றதென எடுத்துக்கொள்ளலாம். ஆனால் 'பெடியன்களின்' இந்தக் காரியமே உண்மையில் ஒரு சமுதாயச்சீர்கேடு. தனிமையில் இருக்கும் வயதுக்கு வந்த இருவரது சுதந்திரத்தை தடைவிதிப்பதற்கான அதிகாரம் இந்தக் கட்டாக்காலிகளுக்கு கிடையாது. அத்துமீறலை ஒழுக்கநெறியாக மிரட்டி இன்பம் காணும் வக்கிரம் பிடித்தவர்களை சட்டத்தின் முன்னே நிறுத்துவது வடமாகாண சபை நிர்வாகத்தின் பொறுப்பல்லவா? இது நேரடியாக அரசியலோடு தொடர்பில்லாதது மாதிரி தெரிந்தாலும், தமிழ் தேசியவாதம் இன்று நிலையூன்றி நிற்பதற்கான அடிப்படையே இந்த மிரட்டல் அரசியலே.

---

## வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.


# தமிழ் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்களா?

இலங்கை சிறைகளில் நீண்டகாலமாக (சிலர் 10 ஆண்டுகளுக்கும் மேலாக) தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சில நூற்றுக்கணக்கான தமிழ் கைதிகள் தம்மைப் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கும்படி கோரி அண்மையில் சாகும்வரை உண்ணாவிரதம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இவர்களது பிரச்சினை ஒரு வருட காலத்தினுள் தீர்க்கப்படும் எனக் கூறி, உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி சம்பந்தப்பட்ட அமைச்சர்களும், அதிகாரிகளும் கைதிகளிடம் கோரிக்கை விடுத்தனர். ஆனால் இதற்கு முன்னரும் முன்னைய அரசாங்க காலத்தில் பல தடவைகள் தமக்கு இவ்வாறான வாக்குறுதிகள் வழங்கப்பட்டதாகவும், ஆனால் அவை நிறைவேற்றப் படவில்லை எனக்கூறிய கைதிகள், இவ்விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலையிட்டு தாம் ஏற்கக்கூடிய உறுதி மொழி தந்தால் மட்டுமே தமது உண்ணாவிரதம் கைவிடப்படுமென கூறி உண்ணாவிரதத்தைக் கைவிட மறுத்தனர்.

அதைத் தொடர்ந்து, ஜனாதிபதி சார்பாக அவர்களைச் சந்தித்த நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச, ஜனாதிபதியினால் இரு வாரங்களுக்குள் அவர்களது பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற உறுதிமொழியை வழங்கினார். அதைத் தொடர்ந்து கைதிகள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். இதனைத் தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான உப குழுவொன்று தமிழ் கைதிகள் சம்பந்தமாக ஆராய்ந்து தமது முடிவை அறிவித்தது. அதன்படி, தமிழ் கைதிகளை பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்வது சாத்தியமில்லை எனவும், அவர்கள் விரும்பினால் தனித்தனியாக பிணை கோரி விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவித்தது.

முன்னதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச, இவ்விவகாரம் சம்பந்தமாக ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில், இக்கைதிகள் **அரசியல் கைதிகள்** அல்லவென்றும், பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் என்றும், எனவே அவர்களுக்கு பொது மன்னிப்பு



வழங்குவது சாத்தியமில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அமைச்சர் ராஜபக்சவின் கருத்தையே, சட்டம் ஒழுங்கு மற்றும் சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும் எதிரொலித்துள்ளார்.

அவர் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில், "தமிழ் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கினால், படையினருக்கும் அவர்களது குற்றச்சாட்டுகளை விசாரிக்காமல் பொதுமன்னிப்பு வழங்க வேண்டி வரும். 1982 – 83 ஆண்டு முதல் விடுதலைப் புலிகள் பல குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டு பொதுமக்களைக் கொலை செய்துள்ளனர். ஜெனீவா அறிக்கையில் விடுதலைப் புலிகள் மீதும் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளன. எனவே பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க முடியாது. நாங்கள் ஒவ்வொரு வழக்காக ஆராய்வோம். யாராவது உரிய ஆதாரங்களோ அல்லது குற்றச்சாட்டோ இன்றி நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தால் அவர்களை விடுதலை செய்வோம்" எனக் கூறியுள்ளார்.

அதேநேரத்தில், தமிழ் கைதிகள் விவகாரம் குறித்து 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் கொழும்பு நிருபரிடம் கருத்து வெளியிட்ட சிறைச்சாலைகள் ஆணையாளர் ரோகண புஸ்பகுமார, "குற்றச்சாட்டுகள் இன்றி எவரும் தடுத்து வைக்கப் பட்டிருக்கவில்லை. இவர்களில் 48 பேர் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு தண்டனை அனுபவித்து வருகின்றனர். 116 பேருக்கு எதிராக உயர் நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்று வருகின்றன. 62 பேருக்கு எதிராக நீதிவான் நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்று வருகின்றன" எனக் கூறியிருக்கிறார்.

நீதி அமைச்சரதும், பிரதம மந்திரி தலைமையிலான குழுவினதும், சிறைச்சாலைகள் ஆணையாளரதும் கூற்றுகளின்படி, தமிழ் கைதிகள் பொது மன்னிப்புக்கிணங்க விடுதலை செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பது தெளிவாகின்றது.

இந்த நிலையில் அவர்களது விடுதலைக்கு ஒரேயொரு வழிதான் உள்ளது. அது, ஜனாதிபதி மனது வைத்தால் தனக்கு உள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களை பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யலாம் என்பதாகும். ஆனால் ஜனாதிபதி அவ்வாறு செய்வதற்கு முன் வருவாரா என்பதே கேள்வியாகும். அதற்கான அழுத்தத்தை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி அந்தஸ்தை வகிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கொடுக்குமா என்பது அடுத்த கேள்வியாகும்.

முன்னைய அரசாங்கம் 11000 தமிழ்க் கைதிகளுக்கு புனர்வாழ்வு அளித்து (அண்மையில் காலமாகிய தமிழினி உட்பட) விடுதலை செய்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்கள் போக, தற்போது சிறையில் எஞ்சியிருப்பவர்கள் சில நூற்றுக்கணக்கான தமிழ்க் கைதிகளே. பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு புனர்வாழ்வு அளித்த முன்னைய அரசாங்கம், சில நூறுபேருக்கு புனர்வாழ்வு அளிக்க முன்வராதது ஏன்?, இவர்கள் புனர்வாழ்வு அளிக்க சட்டரீதியாக தகுதியற்றவர்களாக இனங்காணப்பட்டவர்களா? போன்ற விடயங்களை தற்போதைய அரசாங்கம் பரிசீலனையில் எடுத்துக்கொள்ளும் என்பதிலும் ஐயமில்லை.

**– நாதன்** (30.10.2015)

# ஃபிடல் கஸ்ட்ரோ 42 ஆண்டுகளுக்கு முன்னர் கூறிய
# தீர்க்கதரிசனமான வார்த்தைகள்!


**“அமெரிக்கா எப்பொழுது ஒரு கறுப்பு ஜனாதிபதியைக் கொண்டு இருக்கிறதோ, உலகம் எப்பொழுது ஒரு லத்தீன் அமெரிக்க பாப்பரசரைக் கொண்டிருக்கிறதோ, அப்பொழுது அமெரிக்கா எம்முடன் பேச்சுவார்த்தை நடாத்த முன்வரும்”.**

இப்படிக் கூறியிருப்பவர் வேறுயாருமல்ல, கியூபப் புரட்சியின் மாபெரும் தலைவரான ஃபிடல் கஸ்ட்ரோ தான் 1973இல் – அதாவது 42 ஆண்டுகளுக்கு முன்னர் – ஒரு ஊடகவியலாளரின் கேள்விக்குப் பதில் அளிக்கையில் இவ்வாறு கூறியிருக்கிறார். எவ்வளவு தீர்க்கதரிசனமான வார்த்தைகள்!

அவர் கூறியதுபோல இன்று விடயங்கள் நடந்தேறி வருவதைக் காண்பதற்கு, அவர் உயிருடன் வாழ்ந்து கொண்டிருப்பது நிச்சயமாக அவருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும்.

இன்றைய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஆட்சியின் கீழ் 53 வருடங்களாக அமெரிக்காவால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கியூபாவுடனான இராஜதந்திர உறவுகள் திரும்பவும் புதுப்பிக்கப்பட்டு, இருநாட்டுத் தலைநகரங்களிலும் தூதராலயங்களும் திறக்கப்பட்டுவிட்டன. விரைவில் கியூபா மீதான பொருளாதாரத் தடையையும் அமெரிக்கா நீக்கக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன. அமெரிக்க வலதுசாரிகளின் கூடாரமான குடியரசுக் கட்சியின் கடுமையான எதிர்ப்பையும் மீறியே ஒபாமா இந்தச் சரித்திர சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இந்த வரலாற்று நிகழ்வை நிகழ்த்திய ஜனாதிபதி ஒபாமா ஒரு கறுப்பு இன வம்சாவழியினர் என்பது குறிப்பிடத்தக்கது. அதைத்தான் கஸ்ட்ரோ 1973இல் மனம் கொண்டு கூறினாரோ என்னவோ?



இன்னொரு புறத்தில் கஸ்ட்ரோ அன்று எதிர்வு கூறியதுபோல, வத்திக்கானில் இன்று லத்தின் அமெரிக்க நாடொன்றைச் சேர்ந்த (ஆர்ஜன்ரினா) பிரான்ஸிஸ் அவர்கள் பாப்பரசராக இருக்கிறார். அவர் சமீபத்தில் கியூபா சென்று கஸ்ட்ரோவுடன் சுமார் ஒரு மணித்தியாலம் வரை பல்வேறு விடயங்கள் குறித்து உரையாடிவிட்டும் வந்திருக்கிறார்.

அதுமட்டுமல்ல, வழமையாக பாப்பரசர்கள் பாரம்பரியமாகப் பின்பற்றி வரும் பழமைவாத நடைமுறைகளை விடுத்து, தனது சொந்த வாழ்விலும், வத்திக்கான் நிர்வாகத்திலும் பல புரட்சிகரமான மாறுதல்களை பாப்பரசர் பிரான்ஸிஸ் மேற்கொண்டிருக்கிறார். அவரது நடவடிக்கைகள் சம்பந்தமாக வத்திக்கானுக்குள்ளும், வெளியிலும் பல விமர்சனங்கள் வந்தபோதிலும் அவர் அவற்றைப் பொருட்படுத்தாது தான் தேர்ந்தெடுத்த பாதையில் பயணிக்கிறார்.

ஒரு சந்தர்ப்பத்தில் தனமீதான விமர்சனங்கள் குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், ‘நான் மார்க்சியவாதி என்றால், ஜேசுநாதரும் மார்க்சியவாதிதான்’ எனக் கூறியதாக சில ஊடகங்கள் குறிப்பிட்டன.

எதுஎப்படியோ, ஃபிடல் கஸ்ட்ரோ குறிப்பிட்டது போல, அமெரிக்காவில் ஒரு கறுப்பு இனத்தவர் ஜனாதிபதியாகவும், வத்திக்கானில் ஒரு லத்தீன் அமெரிக்க நாட்டவர் பாப்பரசராகவும் இருக்கும் சூழலில், அமெரிக்கா இறங்கி வந்து, அமெரிக்க – கியூப உறவுகளைப் புதுப்பித்திருக்கிறது.

ஆன்மீகவாதிகள் என்றால் கஸ்ட்ரோவின் இந்தத் தீர்க்கதரிசனமான வார்த்தைகளை வைத்து, அவரைக் கடவுளின் அவதாரம் என ஆக்கியிருப்பார்கள். ஆனால் உண்மை என்னவெனில், அவர் மக்களின் அவதாரமாக இருப்பதனாலேயே இந்தவிதமான தீர்க்கதரிசனமான வாாத்தைகளைக் கூற முடிந்தது.

**– பொன்மதி**

## பொருள்முதல்வாதமும் ஆன்மீகமும்

**“பொருள்முதல்வாதம் விஞ்ஞானத்தைத் துணை கொள்கிறது. ஆன்மீகவாதம் சமயத்தைத் துணை கொள்கிறது. பொருள்முதல்வாதத்துக்கும் ஆன்மீகவாதத்துக்கும் இடையில் நடைபெறும் போராட்டம், விஞ்ஞானக் கருத்துக்களுக்கும் சமய நம்பிக்கைகளுக்கும் இடையில் நடைபெறும் போராட்டமாகும். பொருள்முதல்வாதம் ஆன்மீகத்துக்கும் சமயத்துக்கும் விரோதமானது. ஆதலால், இயற்கை யாதீத சக்திகளிலும் கடவுளிடத்தும் நம்பிக்கை கொள்வதில்லை. பொருள்முதல்வாதம் நாத்திகத்திினின்றும் பிரிக்க முடியாதது.”**

**- பேராசிரியர் நா.வானமாமலை**

(‘இந்திய தத்துவ மரபும் மார்க்சிய இயக்கவியலும்’ என்ற நூலில்)

# இந்த வருடத்தில் 650 இந்திய மீனவர்கள் கைது!



இந்திய மீனவர்கள் அடிக்கடி இலங்கையின் கடற்பரப்புக்குள் ஊடுருவுவதும், அவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்வதும், பின்னர் தமிழக அரசு இந்திய மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து அவர்களை விடுவிக்க வைப்பதும், தொடர் கதையாக நடந்து வருகிறது.

பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இலங்கை – இந்திய அதிகாரிகளுக்கிடையிலும், இருநாட்டு மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கு இடையிலும் நடைபெற்றும் இன்றுவரை இப்பிரச்சினைக்கு எவ்விதமான தீர்வும் காணப்படவில்லை. இப்பிரச்சினை சம்பந்தமாக யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதுவரிடம் அண்மையில் மகஜர் ஒன்றைக் கையளித்த வடபகுதி மீனவர் சங்கப் பிரதிநிதிகள், “இப்பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்படாவிடின் கடலில் போர் வெடிக்கும்” என நேரடியாகவே துணைத் தூதுவரிடம் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

‘வானவில்’ கடந்த இதழில் (2015 ஐப்பசி) இப்பிரச்சினையை தலைப்புச் செய்தியாக நாம் பிரசுரித்திருந்தோம். அதன் பின்னர் பல்வேறு ஊடகங்கள் இப்பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்திகள், கட்டுரைகள் என்பனவற்றை வெளியிட்டு இருந்ததை அவதானிக்க முடிந்தது.

அத்துடன் மைத்திரி – ரணில் அரசின் கடற்றொழில் அமைச்சர், இந்திய மீனவர்களால் ஏற்படுகின்ற எமது கடல் வள இழப்புக்கு இந்திய அரசிடம் நஸ்டஈடு கோரப்போவதாகவும் கூறியிருந்தார். ஆனால் இன்றுவரை அதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இன்றைய இலங்கை அரசு மேற்குலக சக்திகளினதும், மோடி தலைமையிலான பாரதீய ஜனதா இந்திய அரசினதும் உதவியுடன் ஆட்சிபீடம் ஏறியதால், இலங்கை மக்களைப் பாதிக்கும் விடயங்களில் தேசப்பற்றுடன் செயற்படுவார்கள் என எதிர்பார்ப்பது தவறானதாகும். அண்மையில் நிகழ்வு ஒன்றில் பேசிய இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வெளிப்படையாகவே, “இலங்கை மீது இந்தியா நிர்ப்பந்தம் செலுத்தி வருகிறது” எனக் குறிப்பிட்டதின் மூலம் இந்த உண்மை பகிரங்கத்துக்கு வந்துள்ளது.

மறுபக்கத்தில், உண்மையில் இதில் பாதிக்கப்படுபவர்கள் வடபகுதி மீனவர்கள் என்ற போதிலும், அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இது சம்பந்தமாக எந்தவொரு நடவடிக்கையிலும் இதுவரை ஈடுபட்டதாகத் தெரியவில்லை. தனது நோய்க்கு வைத்தியம் செய்வதற்கு அடிக்கடி இந்திய செல்லும் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் போன்றவர்கள், அல்லது தமது குடும்பங்களை இந்தியாவில் வைத்திருக்கும் மாவை சேனாதிராசா, சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றவர்கள், தாம் இந்திய அரசாங்கத்துடனும், அதன் உளவு அமைப்பான ‘ரோ’வுடனும் வைத்திருக்கும் நல்லுறவைப் பயன்படுத்தி இப்பிரச்சினக்கு ஒரு தீர்வை ஏற்படுத்த முயற்சிக்கலாம்.

ஆனால் அவர்கள் வழமைபோல தமது சொந்த விவகாரங்களை மட்டுமே கவனிப்பதில் நாட்டமாக இருக்கிறார்கள். ஒருவேளை அவர்களது காலஞ்சென்ற தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் 1970 பொதுத் தேர்தல் முடிவு வந்தபின்னர் கையறு நிலையில், “கடவுள்தான் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும்” என்று சொன்னது போல, இந்த வடபகுதி மீனவர்களையும் கடவுள் காப்பாற்றட்டும் என வாளாவிருக்கிறார்களோ என்னவோ?

இந்திய மீனவர்களின் அத்துமீறிய ஊடுருவல் இலங்கைக் கடற்பரப்புடன் மட்டும் நின்றுவிடவில்லை. இந்த வருடம் ஒக்ரோபர் வரை அண்டை நாடுகளின் கடற்பரப்பினுள் ஊடுருவியதற்காக இதுவரை 650 இந்திய மீனவர்கள் அயல்நாடுகளால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இந்திய மத்திய அரசு வெளியிட்ட புள்ளிவிபரங்களின்படி, இலங்கை கடற்படையினர் சுமார் 350 இந்திய மீனவர்களைக் கைது செய்ததுடன், அவர்களின் 52 மீன்பிடிப் படகுகளையும் கைப்பற்றி இருக்கின்றனர். பாகிஸ்தான் அரசு 239 மீனவர்களைக் கைது செய்து, 35 படகுகளைக் கைப்பற்றியுள்ளது. பங்களாதேஸ் 56 மீனவர்களையும், மியன்மார் (பர்மா) 6 மீனவர்களையும் கைது செய்துள்ளது. இவர்கள் எல்லை தாண்டியதாலேயே கைது செய்யப்பட்டதாக இந்திய மத்திய அரசே கூறியுள்ளது. அத்துடன் குஜராத் மாநில மீனவர்களை எல்லை தாண்டிப் போக வேண்டாம் என அறிவுறுத்தும்படி, இந்திய கடலோரக் காவற்படை அம்மாநில அரசுக்கு அறிவித்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் 18ஆம் திகதி பாகிஸ்தான் கடற்பரப்புக்குள் ஊடுருவிய இந்திய மீனவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அதேபோல ஒக்ரோபர் 15ஆம் திகதி அக்கடற்பரப்புக்குள் சென்ற இன்னொரு மீனவர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தார்.

நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து செல்கின்ற போதிலும், இந்திய – இலங்கை அரசுகள் இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காணாமல் இருநாட்டு மீனவர்களையும் மோதவிட்டு வேடிக்கை பார்த்து ரசிப்பதிலேயே ஆவலாக இருப்பதாகத் தெரிகிறது.

**– பங்கிராஸ்**

# வெள்ளை மாளிகையின் பின்னரான எனது வேலையும், எனது பிதுரார்ஜிதமும்

**(My Work since the White House and My Legacy)**

90 வயது நிரம்பிய ஜிம்மி கார்ட்டர் அமெரிக்காவின் முன்னாள் (1977 – 81) ஜனாதிபதி ஆவார். அவர் ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர், 1982இல் தனது மனைவி ரோசலின் (Rosallynn) உடன் இணைந்து 'கார்ட்டர் நிலையம்' (Carter Centre) என்ற அமைப்பை நிறுவினார். அதன் நோக்கம் சமாதானம், நீதி, சுகாதாரப் பிரச்சினைகள் என அவர் விளக்கம் அளித்தார். அவருக்கு 2002இல் அமைதி முயற்சிகளுக்கான நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது.

2015 ஓகஸ்ட் 12இல் அவருக்கு புற்றுநோய் ஏற்பட்டு இருப்பதாக அறிவிக்கப்பட்டது. அதற்கு முன்னதாக அவர் National Geography சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணலின் தமிழாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.



- **நீங்கள் எதற்காக கார்ட்டர் நிறுவனத்தை உருவாக்கினீர்கள்?**

வெள்ளை மாளிகையை விட்டு நான் வெளியேறிய பின்னர், நான் ஜனாதிபதியாகப் பதவி வகித்த மகத்தான நாட்டின் மீது முதலீடு (Capitalize) செய்ய விரும்பினேன். அத்துடன் இடைவெளிகளையும், விடயங்களையும் இட்டு நிரப்புவது பற்றியும் சிந்தித்தேன். ஏனெனில் அவற்றை அரசாங்கங்கள் செய்வதில்லையென்று எனக்குத் தெரியும். எமது முதலாவது எண்ணமாக இருந்தது, சாதாரண அரசாங்கங்களால் ஏற்றுக் கொள்ளப்படாத மக்களிடையே பேச்சுவார்த்தைகள் மூலமாக சமாதான உடன்படிக்கைகளை உருவாக்குவதாகும். அவற்றில் சில – நோபாளத்தின் மாஓயிஸ்ட்டுகள், வட கொரியாவின் கிம் இல் சுங் (Kim Il Sung) பாலஸ்தீன சமூகத்தின் ஹமாஸ் (Hamas) மற்றும் பதாஹ் (Fatah) அமைப்புகள், என்பனவற்றுடன் பல வருடங்களாகத் தொடர்ந்த முயற்சிகளாகும்.

- **நிலையத்தின் எந்த முயற்சி உங்களைப் பெருமைப்பட வைத்தது?**


முதலாவது, நோய்களை ஒழிப்பதில் நாம் மட்டுமே ஒரேயொரு சர்வதேச செயலணியாகும். 23,700 கிராமங்களில் Guinea Worm (ஒருவகைத் தொற்று நோய் – மொ–ர்) என்ற நோயைக் கண்டுபிடித்து அதைக் குணப்படுத்தினோம். நாம் அதைக் கட்டுப்படுத்தியதின் பின்னர், அதன் தொகை 3.6 மில்லியனில் இருந்து 126 ஆகக் குறைந்தது. இரண்டாவதாக, ஜனநாயகம் மற்றும் சுதந்திரம் என்ற வடிவங்களில் மனித உரிமைகளை மேம்படுத்தியுள்ளோம். இந்த வருட முடிவுக்குள் கார்ட்டர் நிறுவனம் 100 தேர்தல்களைக் கண்காணப்புச் செய்து, அவற்றை நேர்மையாகவும் பாதுகாப்பாகவும் நடைபெற வழிவகை செய்துள்ளோம்.

- **நிலையத்துக்கு முன்னால் அடுத்ததாக உள்ள மிகப்பெரிய சவால் என்ன?**

உலகம் முழுவதும் பெண்களும் சிறுமிகளும் கொடூரமான துஸ்பிரயோகங்களுக்கு உள்ளாகிறார்கள். தமக்குப் பிறக்கப்போவது பெண் குழந்தை என அறிந்த பெற்றோரால் பல சிசுக்கள் பிறந்தவுடன் கழுத்து நெரித்துக் கொல்லப்படுகின்றனர் அல்லது கருவிலேயே சிதைக்கப்படுகின்றனர். சர்வதேச எல்லைகளுக்கிடையில் விற்பனை செய்யப்படுவோரில் 70 வீதமானோர் பாலியல் அடிமைகளாக்கப்படும் பெண்களாவர். தமது பட்டப்படிப்பை முடித்து கல்லூரியை விட்டு வெளியேறுவதற்கிடையில் ஐந்து பெண்களில் ஒருவர் பாலியல் தாக்குதலை எதிர்நோக்குகிறார்.

**தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க...**

# அஞ்சலி



## பிராங் ட்ரம்பஸ் - Franc Trampus

கனடாவில் நீண்ட காலமாக முற்போக்கு செயல்பாடுகளில் ஈடுபட்டு வந்த தோழர் பிராங் ட்ரம்பஸ் (Franc Trampus) தனது மனைவியுடனும், மகனுடனும் விடுமுறையைக் கழிப்பதற்காக சிலோவேனியா (Slovenia) சென்றிருந்த வேளையில், 2015 செப்ரெம்பர் 27ஆம் திகதி தனது 76ஆவது வயதில் திடீரென்று காலமாகிவிட்டார். அவரது பூதவுடல் அவரது பிறந்த இடமான Ljubljana இல் உள்ள குடும்ப மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

1938 டிசம்பர் 14ஆம் திகதி பிறந்த தோழர் பிராங், தனது தாய்நாடான யூகோஸ்சிலோவாக்கியாவுக்காக இராணுவத்தில் இணைந்து பணியாற்றிய பின், மிக இளம் வயதிலேயே கனடா சென்று தனது வாழ்க்கையை ஆரம்பித்தார். இராணுவத்தில் இணைந்திருந்த காலத்தில் Serbia, Bosnia, Herzegovina, Slovenia நாடுகளைச் சேர்ந்த பல தோழர்களைத் தனது வாழ்நாள் நண்பர்களாக்கிக் கொண்டார்.

அவர் கனடா சென்ற வேளையில் அங்கு பொது சுகாதார சேவை இல்லாமை, குறைந்த தரத்திலான சமூக நலத் திட்டங்கள், குறைந்த சம்பளத்துடனான மோசமான வேலை நிலைமைகள் என்பனவற்றைக் கண்ணுற்று அதிர்ச்சி அடைந்தார். அதன் காரணமாக அவர் தொழிற்சங்க நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டதுடன், தேசிய கனடிய சுகாதார சேவைத் திட்டம், சிறப்பான சமூக நலத் திட்டங்கள் என்பனவற்றுக்காகவும், பொதுச் சேவைகளைத் தனியார் மயப்படுத்துவதற்கு எதிராகவும், ஏனையவர்களுடன் இணைந்து அயராது போராடினார். அதன் ஒரு பகுதியாக கனடிய கம்யூனிஸ்ட் கட்சியுடனும் தன்னை இணைத்துக் கொண்டு செயல்பட்டார். சிறிது காலம் அமெரிக்காவில் பணியாற்றிய காலத்திலும் தனது சமூகச் செயற்பாடுகளைத் தொடர்ந்தார்.

1986இல் அவரது மனைவி உண்மை கண்டறியும் ஒரு தூதுக்குழுவில் தென் அமெரிக்காவிலுள்ள எல்சல்வடோர், நிக்கரகுவா நாடுகளின் யுத்தப் பிரதேசங்களுக்குச் சென்று திரும்பிய பின்னர், பிராங் மின்சார அமைப்பொன்றில் இணைந்து நிக்கரகுவா சென்று, அடுத்த 4 ஆண்டுகளும் அந்நாட்டின் பாடசாலைகள், வைத்தியசாலைகள், தொழிற்சாலைகள் என்பனவற்றுக்கு மின்சாரம் வழங்கும் பணியில் ஈடுபட்டார். பின்னர் அங்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் சான்டினிஸ்டா (Sandinista) புரட்சி அரசாங்கம் தோல்வியடைந்ததும் கனடா திரும்பினார்.

கனடா — கியூபா தொழிலாளர் ஒருமைப்பாட்டு வலையமைப்பை (Canada – Cuba Labour Solidarity Network) நிறுவுவதிலும் அவர் பெரும் பங்கு வகித்தார். அத்துடன் கியூபாவுக்கு எதிரான அமெரிக்காவின் பொருளாதாரத் தடைக்கு எதிராகவும், பயங்கரவாதக் குற்றம் சாட்டப்பட்டு அமெரிக்காவால் 17 வருடங்களாகச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த (இவர்கள் 2014 டிசம்பர் 17இல் விடுதலை செய்யப்பட்டு விட்டனர்) "ஐந்து கியூபர்கள்" (Cuban Five) என்ற கியூபப் புரட்சியாளர்களின் விடுதலைக்காகவும் நடந்த போராட்டங்களிலும் தன்னை இணைத்துக் கொண்டார்.

இருந்த போதிலும் அவரது பெரு விருப்புக்கு உரிய தாய்நாடான யூகோஸ்சிலோவாக்கியா மீது நேட்டோ நாடுகள் நடாத்திய அழிவுகரமான விமானக் குண்டுவீச்சினாலும், அந்நாடு பல பாகங்களாக உடைக்கப்பட்டதனாலும், அத்துடன் தான் இணைந்திருந்த கனடியக் கம்யூனிஸ்ட் கட்சி சிதைவடைந்ததினாலும், அவர் பெரிதும் மன உளைச்சலுக்கு ஆளானார்.

இருப்பினும், நவ முதலாளித்துவத்தின் பலமான எதிர்ப் – புரட்சிப் பிரச்சாரங்களுக்கு மத்தியிலும் தோழர் பிராங், தனது புரட்சிகர தத்துவார்த்த நிலையில் உறுதியாக நின்றதுடன், உலக மக்களுக்கு ஒரு புதிய சமதர்ம சமுதாய அமைப்புக் கிடைக்க வேண்டும் என்பதற்காக, ரஸ்யா, கியூபா, பிரேசில், யூகோஸ்சிலோவாக்கியா போன்ற நாடுகளின் தோழர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிச் செயற்பட்டார்.

தனது பின்னைய நாட்களில் அவர், கனடாவில் 1918இல் ஆரம்பிக்கப்பட்ட "சோவியத் மக்களின் நண்பர்கள்" (Friends of Soviet People) என்ற அமைப்புடன் இணைந்து செயற்பட்டதுடன், அந்த அமைப்பு வெளியிடும் 'வட தாரகை திசைகாட்டி' (North Star Compass) என்ற மாதாந்த சஞ்சகையிலும் பெரும் பங்கு வகித்தார்.

தோழர் பிராங் அவர்களின் மறைவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு 'வானவில்' தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன், அவருக்கு தனது புரட்சிகர அஞ்சலியையும் செலுத்துகின்றது.

## எழுத்தாளர் 'சிற்பி' காலமானார்!

தமிழிலக்கித்துறையில் ஒரு குறிப்பிடத்தக்க எழுத்தாளராகவும், இதழியலாளராகவும் திகழ்ந்த 'சிற்பி' (சிவசுப்பிரமணிய குருக்கள் சிவசரவணபவன்) தமது சொந்த ஊரான சுன்னாகம் கந்தரோடையில் நவம்பர் 09, 2015 அன்று தமது 82ஆவது வயதில் காலமானார்.

மிருசுவில் உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி என்பனவற்றின் முன்னாள் அதிபரான 'சிற்பி', 1950களின் பிற்பகுதியில் இருந்து 60களின் நடுப்பகுதி வரை, 'கலைச்செல்வி' என்ற இலக்கிய மாத இதழை நடாத்தி, பல இளம் எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்தவராவார். அவரது சஞ்சிகையை அச்சிட்ட அவரது சகோதரர் சுன்னாகத்தில் நடாத்தி வந்த கலைச்செல்வி அச்சகமும், அதற்கு அருகில் இன்னொரு சகோதரர் நடாத்தி வந்த 'பிராமணாள் கிளப்' என்ற பிரசித்தி பெற்ற உணவகமும், அந்த நாட்களில் பல தமிழ் எழுத்தாளர்கள் மாலை நேரங்களில் சந்தித்து உரையாடும் இடங்களாகத் திகழ்ந்தன.

1950 — 60களில் முற்போக்கு இலக்கியம் வீறாப்பாக எழுச்சி கொண்ட காலத்தில் 'சிற்பி' நடாத்திய கலைச்செல்வி சஞ்சிகை மரபு எழுத்தாளர்களின் களமாகத் திகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# ‘போனஸ்’ பிறந்த சரித்திரம் என்ன சொல்கிறது?

இந்தியாவில் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்திற்கு முன்பு வார சம்பள முறையே நடைமுறையில் இருந்து வந்துள்ளது.

ஆங்கிலேயர்கள் மாத சம்பள முறையை அமுல் படுத்தினார்கள். 4வாரங்களுக்கு ஒரு சம்பளம் என கணக்கிட்டு ஒரு மாத சம்பளமாக கொடுத்தனர்.

அவ்வாறு மாதத்திற்கு ஒரு முறை சம்பளம் என்றால் வருடத்திற்கு 12 தடவைகள் தான் சம்பளம் வருகிறது. ஆனால் 4 வாரத்திற்கு ஒரு முறை சம்பளம் என்று கணக்கிட்டு பார்த்தால் வருடத்திற்கு 13 தடவைகள் சம்பளம் வர வேண்டும்.

இந்தியர்கள் என்றால் சும்மாவா?

அதனை தரும்படி 1930–1940 களில் மஹாராஷ்டிராவில் உள்ள தொழிற்சங்க ஊழியர்கள் தங்களது 4 வாரகால சம்பளம் வஞ்சிக்கப்படுவதாக போராடினார்கள். அதன் விளைவாக, அந்த 4 வாரகால சம்பளத்தை எப்போது எப்படி கொடுக்கலாம் என பிரிட்டிஷார் தொழிற்சங்க தலைவர்களுடன் ஆலோசனை செய்தார்கள்.

அப்போது தான் தீபாவளி/தசரா பண்டிகை பிரசித்தி பெற்ற பண்டிகையாதலால் அதனையொட்டி கொடுத்தால் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய அது வசதியாக இருக்கும் என கோரிக்கை வைத்ததின் விளைவாக ‘போனஸ்’ என்ற பெயரில் முதன் முதலில் 1940ம் வருடம் ஜூன் மாதம் 30ம் தேதி வழங்கப்பட்டது.

பின்நாட்களில் அது இலாப விகிதத்தை கணக்கிட்டு விஸ்தரிக்கப்பட்டது.

இன்றைக்கு பல மக்களுக்கு இந்த சரித்திர நிகழ்வு தெரிந்திருக்க வாய்ப்பில்லை




## ஒரு வரிச் செய்திகள்

- முயல்களின் ஆயட்காலம் 9 வருடங்களாகும்.
- உலகில் 7,000 இற்கும் மேற்பட்ட அப்பிள் பழ வகைகள் உள்ளன.
- ஆங்கிலத்தில் பழங்களைக் குறிக்கும் Fruit என்ற சொல், Enjoyment (அனுபவித்தல்) என்ற அர்த்தத்தைக் குறிக்கும் Fructus என்ற லத்தீன் சொல்லில் இருந்து வந்ததாகும்.
- ஒரு Walnut விதையின் பருப்பில் 2.3mg (மில்லிகிராம்) இரும்புச்சத்து உள்ளது.
- கனடாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் உள்ள மிக்சிக்கன் ஏரியின் பரப்பளவு 1,180 கியூபிக் மைல்கள் அல்லது 4,918 கிலோ மீட்டர்களாகும்.
- இந்தியாவின் கேரள மாநில காட்டுப் பகுதியில் புதிதாக 14 நடனமாடும் தவளை வகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## மொத்தத் தமிழ் எழுத்துக்கள்

உயிரெழுத்துக்கள் 12, ஆய்த எழுத்து 1, மெய்யெழுத்துக்கள் 18 மற்றும் உயிர்மெய்யெழுத்துக்கள் 216 (12 x 18) சேர்ந்து மொத்த தமிழெழுத்துக்கள் 247. இவற்றுடன், சில வடமொழி உச்சரிப்புகளை வரி வடிவில் சொல்ல ஏதுவாக, ஹ ஷ ஜ, ஸ, ஸ்ரீ, க்ஷ முதலான எழுத்துக்களும் தற்காலத்தில் வழக்கிலுள்ளன.

# நேபாளத்தில் மனிதனும் இயற்கையும் நிகழ்த்திய பேரழிவுகள்!

நேபாள நாட்டில் இவ்வருடம் நடந்த பூமியதிர்வால் 10,000இற்கும் மேற்பட்ட மக்கள் இறந்ததுடன், பல்லாயிரக்கணக்கானோர் அங்கவீனமும் உற்றனர். பல இலட்சம் கோடி பெறுமதியான சொத்தழிவும் ஏற்பட்டது.

அதேநேரம், 2014இல் அந்நாட்டில் நடைபெற்ற ‘நேபாளம் கால்நடைத் திருவிழா’வின் போது, 3 இலட்சம் ஆடுகளும், மாடுகளும் கடவுளர்களுக்காகப் பலியிடப்பட்டன.

அந்த நாட்டில் மனிதனும் இயற்கையும் போட்டி போட்டுக்கொண்டு அழிவை ஏற்படுத்தி இருக்கிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

## ருசிக்கும் இசைக்கும் உள்ள தொடர்பு!

தமிழ்நாட்டிலுள்ள பண்ருட்டி என்ற ஊர் சுவையான பலாப்பழத்துக்குப் பெயர் போனது. சுவையான பழங்கள் மட்டுமின்றி அந்தப் பலா மரங்களிலிருந்துதான் தவில், தபோலா, மிருதங்கம், உடுக்கை, பம்பை, வீணை போன்ற பெரும்பாலான இசைக் கருவிகளும் தயாரிக்கப்படுகின்றன. சிறப்பான இசைக் கருவிகளைச் செய்வதற்கு 100 வருடங்களுக்கு மேற்பட்ட பலா மரங்களையே தேர்ந்தெடுக்கின்றனர்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்தி ரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்!
இறவாத புகழு டையபுது நூல்கள்!
தமிழ் மொழியி லியற்றல் வேண்டும்!

–மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

## முதலாம் உலகப் போர் வீரர்களின் சடலங்கள்!

புவி வெப்பமடைவதால் துருவப் பிரதேசங்களில் மட்டுமின்றி, இமயமலை போன்ற உலகின் மிக உயர்ந்த மலைகளிலுள்ள பனிச் சிகரங்களில் உள்ள பனிப்பாளங்களும் உருகி வருகின்றன.

அப்படியான இத்தாலியின் வடக்குப் பகுதியிலுள்ள 6,500 அடி உயரமான ஒரு பனிச்சிகரம் உருகிய போது, முதலாவது உலக யுத்த காலத்தில் (1915 – 18) இறந்துபோன இரண்டு போர் வீரர்களின் சடலங்கள் பனிப்பாளங்களிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. அவர்கள் 'வெள்ளை யுத்தம்' என வர்ணிக்கப்பட்ட, இத்தாலி மற்றும் ஆஸ்திரோ – ஹங்கேரி படைகளுக்கிடையில் நடபெற்ற போரில் உயிரிழந்தவர்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

1990 இற்குப் பின்னர் இப்படியான சில சடலங்கள் இத்தாலியின் பனிச் சிகரங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு கண்டு பிடிக்கப்படும் சடலங்கள் பிரேத பரிசோதனையின் பின்னர் உரிய முறையில் அடக்கம் செய்யப்படுகின்றன. சிலரை அவர்களது உடலில் உள்ள இலக்கத் தகடு அடையாளம் காட்டுகிறது. இலக்கத் தகடு இல்லாதவர்கள் மரபணு ஆய்வின் மூலம் அடையாளம் காண்பதற்கு உரிய விபரங்கள் கிடைப்பதில்லை. சில உடல்களுடன் அவர்கள் எழுதிய நாட்குறிப்புகள் மற்றும் குடும்பத்தினருக்கு எழுதிய அஞ்சலிடப்படாத கடிதங்கள் என்பனவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

12,000 ஆயிரம் அடி உயரத்தில் அமைந்திருந்த மரப்பலகைகளால் ஆன இந்த இராணுவ முகாமை கோடை காலத்தில் சில மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

## ஆஸ்துமாவை குணப்படுத்தும் நொச்சி இலை

நொச்சி இலைகள் பல நோய்களை விரட்டும் திறன் கொண்டது.

இந்த தாவரத்தின் இலைகள், வேர், பட்டை, மலர்கள், கனி, விதை என முழுத்தாவரமும் பயன்படுபவை.

தானியங்களை சேமிக்கும் பொழுது நொச்சித் தழைகளை உடன் வைத்து விடுவர். இது பூச்சிகள் வருவதை தடுக்கும்.

மூக்கிலிருந்து நீர் ஒழுகுதல், ஜலதோஷத் தலைவலிக்கு கைகண்ட மருந்து நொச்சி தைலம்.

நொச்சி இலையில் ஒத்தடம் கொடுத்தால் வாயுப்பிடிப்பு, சுளுக்கு நீங்கும்.

நொச்சி இலைகளை ஒரு துணிப்பையில் அடைத்துப் தலையணையாகப் பயன்படுத்தினால் ஜலதோஷம் பறந்துவிடும்.

சீழ்பிடித்து அழுகிச் சொட்டும் புண்ணைக் கூட நொச்சி தைலத்தால் குணப்படுத்தலாம்.

தீராத வாதநோய் வலிப்பு குணமாக நொச்சி இலையுடன் பூண்டு, ரோஜா மொட்டு அல்லது காசினி விதைப்பூ சேர்த்த அரிசிக்கஞ்சியை குடிக்கலாம்.

இந்த இலைகளை நீரிலிட்டு காய்த்து குளித்து வர கீல் வாதம் மறையும்.

நொச்சி பூவின் சாறு அரைக்கரண்டி எடுத்து, சம அளவு தேன் கலந்து உண்ண காய்ச்சல் குணமாகும்.

### ஆஸ்துமாவை குணமாக்க

முதலில் தாச்சிச்சட்டியில் சிறிது எண்ணை விட்டு கடுகு போட்டு நொச்சி இலையை இலேசாக வறுக்கவும். பிறகு இதனுடன் வெற்றிலை மிளகு மற்றும் மிளகாய் செடியின் இலையை அரைத்தால், நொச்சி இலை துவையல் ரெடி.

இந்த துவையலை தினமும் காலையும் மாலையும் சாப்பிட்டு வந்தால் ஆஸ்துமா நோய் குணமடையும்.

இதை முதுகில் பூசிக்கொண்டால், முதுகு வலி பறந்துவிடும்.

மேலும் சுவாச கோளாறுகள் நீங்கி நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

### நொச்சி கஷாயம்

நொச்சி இலை போட்டு ஊற வைத்த தண்ணீரைச் தாச்சிச்சட்டியில் வைத்து சிறிது மிளகு மற்றும் உப்பு சேர்த்து நன்கு கொதிக்க வைத்தால் நொச்சி கஷாயம் ரெடி.

இந்த கஷாயம் மலேரியா நோயை விரட்டும் சக்தி வாய்ந்தது.

நாக்குப்பூச்சி வாத நோய்கள் மற்றும் வயிற்றுவலி நீங்கும்.

## நல்லதோர் வீணை செய்தே....

வீணைகளில் 'தஞ்சாவூர் வீணை' உலகப் பிரசித்தி பெற்றது. அது கோவிந்த தீட்சிதர் என்பவரால் 17ஆம் நூற்றாண்டில் வடிவமைக்கப்பட்டது. இதில் 24 மெட்டுகள் உண்டு. இதே நூற்றாண்டில் அரசாட்சி செய்த ரகுநாத நாயக்க மன்னன் 'சங்கீத சுதா' என்ற இசை சம்பந்தமான நூல் ஒன்றையும் எழுதியிருக்கிறார்.

வீணைகளை நன்கு பராபரித்தால் 100 ஆண்டுகள் வரை அவை பழுதுபடாமல் இருக்கும்.

'இலங்கேஸ்வரன்' என அழைக்கப்படும் இலங்கையின் தமிழ் மன்னன் இராவணன் தனது ஆட்சிக் கொடியில் வீணைச் சினத்தையே பொறித்திருந்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் பாரிசவாத நோய் உள்ளவர்கள் அது பற்றி அறியாது இருக்கின்றனர்!

**–யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நரம்பியல் நிபுணர்**

*"யாழ் மாவட்டத்தில் பாரிசவாத நோய் (paralysis disease) தொடர்பாக மக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வு இல்லை. அதனால் இந்நோய்த் தாக்கத்துக்குள்ளான ஏராளமானவர்கள் தங்களை நோய் தாக்கியிருப்பதை அறிந்து கொள்ளாமல் வைத்தியசாலையை அணுகாமல் உள்ளனர்".*

இவ்வாறு கூறியிருக்கிறார் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நரம்பியல் நிபுணர் வைத்தியக் கலாநிதி திருமதி அஜந்தா கேசவராஜ். பாரிசவாத விழிப்புணர்வு வாரத்தையொட்டி யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இக்கருத்தை வெளியிட்டுள்ளார். தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறுகையில்:

"மக்கள் மத்தியில் பாரிசவாதம் தொடர்பான போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தினாலேயே நோயாளிகள் வைத்தியசாலையை நாடுவது மிகவும் குறைவாக உள்ளது. பாரிசவாத நோய் 85 வீதமானவர்களுக்கு இரத்தக் குழாயில் ஏற்படும் அடைப்புக் காரணமாகவே ஏற்படுகின்றது. இது தவிர புகை பிடித்தல், மது பாவனை போன்றவற்றினாலும் ஏற்படுகின்றது. பெரும்பாலும் ஆண்களையே இந்நோய் தாக்குகின்றது.

பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் காரணமாக அவர்கள் இந்நோய் தாக்கத்திலிருந்து சற்று விலகி இருப்பர். இருப்பினும் 50 வயதைத் தாண்டிய ஆண்களிலும் பெண்களிலும் சமமான அளவில் இந்நோய் தாக்கத்தைச் செலுத்துகின்றது.



**வைத்தியக் கலாநிதி அஜந்தா கேசவராஜ்**

கடைகளில் விற்பனையாகும் தயாரித்த உணவுகளை வாங்கி உண்பதால், புற்றுநோய் மட்டுமல்லாது, அதிக கொழுப்பு உடலில் படிவதால் பாரிசவாத நோயும் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இது ஒரு தொற்று நோய் அல்ல. இந்நோய்க்கான அறிகுறிகளை வைத்தியர்கள் மட்டுமின்றி சாதாரண பொதுமக்களும் அறிந்து கொள்ள முடியும். சடுதியாக முகத்தில் ஏற்படும் மாற்றம், பேச்சுக்களில் ஏற்படும் மாற்றம், ஒருபக்க கை கால்களில் ஏற்படும் மாற்றம் என்பன பாரிசவாத நோயின் ஆரம்ப அறிகுறிகளாக உள்ளன.

இந்த நோய்த் தாக்கத்தை அறிந்து கொண்டவர்கள் நான்கு தொடக்கம் நான்கரை மணித்தியாலங்களுக்குள் வைத்தியசாலைக்குச் சென்று தகுந்த சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு உரிய நேரத்தில் சிகிச்சையைப் பெற்றுக் கொண்டால் இந்நோயிலிருந்து விடுபட முடியும்.

எனவே, பொதுமக்கள் இந்நோய் தொடர்பாக முழுமையான விழிப்புணர்வைப் பெற்றிருக்க வேண்டும். இந்நோய் தொடர்பான விழிப்புணர்வைப் பெற்றுக் கொண்டவர்கள் தமது சமூகத்திலும், பாடசாலைகள் மட்டத்திலும் இந்நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தப் பாடுபட வேண்டும்."

இவ்வாறு அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

**6ம் பக்கத்தொடர்ச்சி...**

இந்தக் குற்றம் எமது நாட்டில் எப்போதாவது ஆராயப்படுவதுடன், அது இப்பொழுது இராணுவத்திலும் நிகழ்கிறது. இவ்வகையான விடயங்களில் கார்ட்டர் நிறுவனம் எதிர்வரும் ஆண்டுகளில் கவனம் செலுத்த இருக்கிறது.

**('வானவில்' குறிப்பு:** அமெரிக்கா என்ற உலகின் முதல்தர வல்லரசு நாட்டில் ஜனாதிபதியாகப் பதவி ஏற்பவர்கள் தமது பதவிக் காலத்தின் போது அந்நாட்டின் உலகளாவிய வல்லாதிக்கக் கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதில் தீவிரமாக இருப்பதும், பதவியிலிருந்து விலகிய பின்னர் தமது பெயர்களில் நிறுவனங்களை உருவாக்கி 'மக்களுக்குச் சேவை செய்வதும்' ஒரு சம்பிரதாயமாக இருந்து வருகிறது. கார்ட்டர் தம்பதிகளும் அதையே செய்கின்றனர்.

கார்ட்டர் நிலையம் போன்று வேறு சில முன்னாள் ஜனாதிபதிகளின் பெயரிலும் 'போர்ட் பவுண்டேசன்', 'கிளின்டன் பவுண்டேசன்' போன்ற நிறுவனங்களும் செயற்படுகின்றன. அப்படியான நிறுவனம் ஒன்றில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஒருவரும் இணைந்து செயல்படுகின்றார். அவர் எமது நாட்டில் இவ்வருடம் ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போதும், அதன் முன்னரும் பின்னரும் நடந்து கொள்ளும் முறைகளில் இருந்து இந்நிறுவனங்கள் ஏனைய நாடுகளில் எவ்வகையான வேலைகளைச் செய்து வருகின்றன என்பதை ஒருவர் புரிந்து கொள்ள முடியும்)

ஒரு கணமேனும் மக்கள் திரளிடமிருந்து நம்மைப் பிரியாமல் வைத்திருக்க வேண்டும். எதைச் செய்தாலும் மக்களின் நலன்களிலிருந்து தொடங்க வேண்டும். ஒருவரது சுயநலனிலிருந்தோ ஒரு சிறு கும்பலின் நலன்களிலிருந்தோ எதையும் செய்யக் கூடாது.

**-மா ஓ சேதுங்**

# காஸ்மீர் மற்றும் சிரிய மக்களுக்கு ஆதரவாக கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

இந்தியாவின் கட்டுப்பாட்டின் கீழுள்ள காஸ்மீர் பகுதி மக்களுக்கெதிராக இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டித்து கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்துக்கு முன்னால் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றுள்ளது. காஸ்மீர் கறுப்பு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை காஸ்மீர் படிப்பு அரங்கு (Kashmir Study Forum) என்ற அமைப்பும், பாகிஸ்தான் மற்றும் இலங்கை சமூகத்தவர்களும் ஏற்பாடு செய்திருந்தனர்.

காஸ்மீர் கறுப்பு தினத்தை ஒட்டி கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் விடுத்துள்ள ஒரு அறிக்கையில்,

“ஐ.நா. பாதுகாப்பு சபையின் தீர்மானங்களின் அடிப்படையில் காஸ்மீர் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு ஐ.நா. செயலாளர் நாயகம் முன்னுரிமை கொடுத்துச் செயற்பட வேண்டும். அவர் ஐ.நா. சாசனத்தின் அடிப்படையிலும், பொருத்தமான சர்வதேச வழிமுறைகள் ஊடாகவும், காஸ்மீர் மக்களின் சுய — நிர்ணய உரிமையின் ஊடாக அவர்களது அடிப்படை உரிமைகளையும், சுதந்திரங்களையும் உத்தரவாதம் செய்ய வேண்டும்” எனக் கூறப்பட்டுள்ளது.

இது மாதிரியான ஆர்ப்பாட்டங்கள் அம்பாறை, மட்டக்களப்பு, புத்தளம் போன்ற நகரங்களிலும் நடைபெற்றுள்ளன.

அத்துடன் ஆயிரக்கணக்கானோர் கையெழுத்திட்ட மகஜர் ஒன்றும் கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளது. அதில் இந்திய கட்டுப்பாட்டிலுள்ள ஜம்மு — காஸ்மீர் பகுதி கிராமங்களில் இந்திய ஆயுதப் படைகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் படுகொலைகள் மற்றும் சித்திரவதைகள் பற்றி உலகின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதுடன், கண்டனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் காஸ்மீர் பற்றிய 1947ஆம் ஆண்டுத் தீர்மானத்தின் அடிப்படையில் காஸ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இதனிடையில், சிரிய நாட்டின் மீதான அமெரிக்கத் தலையீட்டைக் கண்டித்தும் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்னால் இடதுசாரி அமைப்பு ஒன்றினால் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன் போது ஆர்ப்பாட்டக்காரர்கள், “அமெரிக்காவே சிரியாவை விட்டு வெளியேறு”, “அமெரிக்கா ஏகாதிபத்தியம் ஒழிக” போன்ற கோசங்களை எழுப்பியதுடன், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவினது உருவப் பொம்மை ஒன்றையும் தீயிட்டுக் கொளுத்தினர். *

# லாவோசின் துயரம்!




அமெரிக்கா வியட்நாம் மீது ஆக்கிரமிப்பு யுத்தம் நடாத்திய காலத்தில் (1965 — 70) அதன் அண்டை நாடான லாவோஸ் (Laos) மீதும் விமானக் குண்டுத் தாக்குதலை நடாத்தியது. 1964 முதல் 1973 வரை நடாத்தப்பட்ட இந்தக் குண்டுத் தாக்குதலின்போது, சுமார் 2 இலட்சத்திற்கு மேற்பட்ட தொன் குண்டுகளை அமெரிக்கா லாவோஸ் மீது வீசியது. அதாவது 8 நிமிடங்களுக்கு ஒரு விமானம் நிறைந்த குண்டுகள் என்ற கணக்கில் 9 வருடங்களாகக் குண்டு வீசியது.

இன்னொரு வகையில் சொல்வதானால், ஒவ்வொரு லாவோஸ் பிரசையின் (அப்பொழுது சனத்தொகை 2 மில்லியன்) தலைக்கும் 2,000 இறாத்தல் குண்டு என்ற கணக்கில் அமெரிக்கக் குண்டுவீச்சு இருந்தது.

இதில் 270 மில்லியன் குண்டுகள் கொத்துக் (Cluster Bombs) குண்டுகளாகும். 4 மில்லியன் பெரிய குண்டுகளாகும். இதில் மில்லியன் குண்டுகள் வெடிக்கவில்லை. பெரிய குண்டுகளிலும் 10 சதவீதமானவைகள் வெடிக்கவில்லை. இன்றும் லாவோசின் பல பகுதிகளில் வெடிக்காத குண்டுகள் மீட்கப்பட்டு வருகின்றன.

இருந்தும் எப்படி வியட்நாம் மக்களை அமெரிக்காவால் அடிபணிய வைக்க முடியவில்லையோ, அதேபோல பதட் லாவோ (Pathet Lao) விடுதலை இயக்கத்தின் தலைமையில் சுதந்திரத்துக்காகப் போராடிய லாவோஸ் மக்களையும் அமெரிக்காவால் அடிபணிய வைக்க முடியவில்லை.

இந்தக் குண்டின் உலோகங்களில் இருந்து செய்யப்பட்ட கரண்டிகளையும், முள்ளுக்கரண்டிகளையும், வேறு பல பொருட்களையும் சுதந்திர லாவோசின் உணவு விடுதிகளிலும், வேறு இடங்களிலும் தாராளமாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

1975இல் வியட்நாமில் நடந்த இறுதி யுத்தத்தில் அமெரிக்கா அவமானகரமாகத் தோற்கடிக்கப்பட்டு, அமெரிக்கப் படைகள் முழு இந்தோசீனாவையும் விட்டு வெளியேறின. அதன்பின்னர் பிரிக்கப்பட்டிருந்த வடக்கு – தெற்கு வியட்நாம்கள் இணைக்கப்பட்டதோடு, லாவோஸ், கம்போடியா நாடுகளும் விடுதலையடைந்தன.

லாவோஸ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை, பதட் லாவோ விடுதலை முன்னணியின் மூலம், லாவோ மக்கள் புரட்சிகரக் கட்சி நெறிப்படுத்தி வந்தது. இன்று லாவோசில் மக்கள் ஜனநாயக அரசாங்கம் பதவியில் இருந்து, லாவோசின் பிரத்தியேக சூழ்நிலைகளுக்கு ஏற்ப சோசலிச கொள்கைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இன்று லாவோஸ் அமெரிக்கா உட்பட அநேகமாக உலகின் எல்லா நாடுகளுடனும் நட்புறவைக் கொண்டிருக்கிறது. ஏகாதிபத்திய எதிர்ப்பே அதன் அயலுறவுக் கொள்கையின் அச்சாணியாக இருக்கின்றது.

லாவோசின் தலைநகராக வியன்ரைன் (Vientiane) இருக்கின்றது. இன்றைய லாவோசின் சனத்தொகை 5 மில்லியனாகும். பொருளாதார வளர்ச்சி 8 வீதமாகும். மொத்தமுள்ள 7 மில்லியன் சனத்தொகையில், 5 மில்லியன் பேர் செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்களாக இருக்கின்றனர். *

## பார்வைகள்: ஜஸ்ரின் ரூடோ (Justin Trudeau)

# கனடாவின் நிலையில் மாற்றமில்லை!

பிரான்சின் தலைநகர் பாரீசில் IS பயங்கரவாதிகள் குண்டுத் தாக்குதல்களையும், தற்கொலைத் தாக்குதல்களையும் நிகழ்த்தி நூற்றுக்கு மேற்பட்டவர்களைக் கொலை செய்த பின்னர், துருக்கியில் நடைபெற்ற ஜி20 நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட கனடாவின் புதிய அரசாங்கத்தின் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ கருத்துத் தெரிவிக்கையில், சிரியாவில் பயங்கரவாதிகளின் இலக்குகள் மீது விமானத் தாக்குதல் நடாத்தும் மேற்குலகப் படையணியிலிருந்து தமது நாட்டை விலக்கிக் கொள்வது எனத் தமது அரசாங்கம் எடுத்த முடிவில் மாற்றம் எதுவுமில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

கனடிய அரசாங்கம் வேறு வழிகளில் சிரிய மக்களுக்கு காத்திரமான உதவிகளை வழங்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவின் முன்னைய ஸ்ரீபன் கார்பர் தலைமையிலான கொன்சவேர்டிக் கட்சி அரசாங்கம், சிரியாவில் கனடிய விமானப்படையை நேரடி நடவடிக்கையில் ஈடுபடுத்தும் தீர்மானத்தை எடுத்தபோது, அப்போதைய பிரதான எதிர்க்கட்சியான புதிய ஜனநாயகக் கட்சியும் (NDP) ரூடோ தலைமையிலான லிபரல் கட்சியும் அதைக் கடுமையாக எதிர்த்திருந்தன. ரூடோ தமது கட்சி ஆட்சிக்கு வந்தால் சிரியாவிலிருந்து தமது நாட்டின் குண்டுவீச்சு விமானங்கள் திருப்பி அழைக்கப்படும் என்றும் தேர்தல் பிரச்சாரத்தின் போது குறிப்பிட்டிருந்தார்.

இதனிடையே, தாம் ஆட்சிக்கு வந்தால் இவ்வருட டிசம்பர் இறுதிக்குள் 25,000 சிரிய அகதிகளை கனடாவுக்கு அழைப்பது என்ற வாக்குறுதியையும் ரூடோ வழங்கியிருந்தார்.

ஆனால் பயங்கரவாதிகளின் பாரீஸ் தாக்குதலை அடுத்து, கனடாவின் சாஸ்கற்ச்வன் மாகாண பிரதமர் பிராட் வோல் (Sasketchewan Premier Brad Wall), கனடியர்களின் பாதுகாப்பை முன்னிட்டு அந்தத் திட்டத்தைக் கைவிடும்படி ரூடோ தலைமையிலான கனடிய மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

## பார்வைகள்: விளாடிமிர் புடின் (Viladimir Putin)

# ISIS பயங்கரவாத இயக்கத்துக்கு சில G20 நாடுகளிலிருந்தும் பண உதவி கிடைக்கிறது!

துருக்கியில் நவம்பர் நடுப்பகுதியில் நடைபெற்ற ஜி20 நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட ரஸ்ய ஜனாதிபதி விளாடிமிடிர் புடின், அங்கு ஊடகவியலாளர்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார். அங்கு அவர் பின்வரும் விடயங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்:

"எமக்குக் கிடைத்துள்ள தகவல்களினபடி, இஸ்லாமிய அரசின் – Islamic State (Formerly ISIS/ISIL) பல்வேறு பிரிவினர்களுக்கு பிரத்தியேகமான தனி நபர்களினால் நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. சுமார் 40 நாடுகளில் இருந்து வரும் இந்நிதி உதவி வழங்கும் நாடுகளில் சில ஜி20 நாடுகளும் உள்ளடங்கி இருக்கின்றன.

IS இயக்கம் சட்டவிரோதமாக பெற்றோலியப் பொருட்கள் விற்பனையில் ஈடுபட்டிருப்பதை நான் எனது கூட்டாளிகளுக்குக் காட்டினேன். அதில் 4,000 முதல் 5,000 மீட்டர் உயரத்தில் இருந்து பார்க்கையில் எண்ணெய் வாகனங்கள் பல கிலோ மீட்டர் தூரத்துக்கு அணி வகுத்துச் செல்வதைக் காண முடிந்தது.

IS உடன் போராடுவதில் எந்தவொரு நாடு கூடுதலாகப் பங்கு வகிக்கின்றது அல்லது எது குறைவான பங்கு வகிக்கின்றது என்பதைக் கணக்கிடும் நேரம் இதுவல்ல. அந்தப் பயங்கரவாதக் குழுவுடன் போரிடுவதற்கு ஒன்றுபட்ட சர்வதேச நடவடிக்கை தேவை. ரஸ்யாவைப் பொறுத்தவரை அத்தகைய ஒரு நடவடிக்கைக்குத் தயாராகவே உள்ளது.

சிரியாவில் அரசுக்கு எதிராகப் போராடி வரும் சில எதிரணி ஆயுதக்குழுக்கள் ரஸ்யாவின் உதவியுடன் IS எதிராகப் போராடுவது குறித்துப் பரிசீலித்து வருகின்றன. அத்தகைய உதவியை வானத்திலிருந்து வழங்குவதற்கு நாம் தயாராகவே உள்ளோம். இது நடக்குமானால் அரசியல் தீர்வுக்கான நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு இது ஒரு நல்ல அடித்தளமாக அமையும்.

எமக்கு உண்மையில் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், சவூதி அரேபியா, துருக்கி, ஈரான் என்பனவற்றின் உதவி தேவைப்படுகின்றது. பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்கவும், அதைக் கையாளவும், விசேடமான கூர்மையாக ஒழுங்கமைக்கப்பட்ட வேலைமுறை எமக்குத் தேவை.

IS இற்கு எதிராக அமெரிக்காவுடன் இணைந்த கூட்டு நடவடிக்கைக்கு நாம் அழைப்பு விடுத்தோம். ஆனால் துரதிர்ஸ்டவசமாக எமது அமெரிக்கப் பங்காளர்கள் அதை நிராகரித்துவிட்டனர். 'நாங்கள் உங்கள் அழைப்பை நிராகரிக்கின்றோம்' என்ற எழுத்து வடிவிலான ஒரு குறிப்பை அவர்கள் எமக்கு அனுப்பி வைத்திருக்கின்றனர்.

ஆனால் வாழ்க்கை என்பது எப்பொழுதும் வளர்ச்சி அடைவதுடன், வேகமாகவும் நடைபோட்டு, அடிக்கடி

எமக்குப் பாடங்களைக் கற்பிக்கின்றது. நான் நினைக்கிறேன், பயங்கரவாதத்துக்கு எதிராக ஒன்றுபட்ட காத்திரமான போராட்டம் மட்டுமே இன்றைய தேவை என்ற உண்மை ஒவ்வொருவரையும் வந்து அடைந்திருக்கும்.

முதலில் சிரியாவில் எந்தக் குழுக்கள் பயங்கரவாத அமைப்புகள் என எல்லோரும் இனம் காண்பதுடன், எவை ஆயுதம் ஏந்துவதற்கு அருகதை உள்ளவை என்பதையும் அறிய வேண்டும்.

எமது முயற்சிகள் கட்டாயமாக பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிரான போராட்டத்தை மையப்படுத்துவதாக இருக்க வேண்டும். செப்ரெம்பர் 30இற்குப் பின்னர் சிரியாவில் இஸ்லாமிய அரசு என்ற அமைப்புக்கும், ஏனைய பயங்கரவாத அமைப்புகளுக்கும் எதிராக ரஸ்யா நடாத்தும் பரந்தளவிலான விமானத் தாக்குதல்களை மேற்குலகம் விமர்சிப்பதை ரஸ்யா நிராகரிக்கின்றது. எம்மை விமர்ச்சிப்பது உண்மையில் வருத்தத்துக்குரியது.

சிரியாவில் பயங்கரவாத இலக்குகளைத் தரும்படி ரஸ்யா தனது வெளிநாட்டுப் பங்காளர்களிடம் திரும்பத் திரும்பக் கேட்டது. ஆனால் அவர்கள் அதைத் தருவதற்குப் பயப்படுகிறார்கள். ஏனெனில் நாம் அந்த இலக்குகளைத் தாக்கி, தம்மை ஏமாற்றி விடுவோம் எனக் கருதுகிறார்கள். எம்மைப் பற்றிய அவர்களது அபிப்பிராயம், அவர்களது சொந்த மனித இயல்பின் வெளிப்பாடாகும்.

ஏற்கெனவே சிரியாவின் அரச எதிர்ப்பு அணியினரில் சில பகுதியினர் எம்முடன் தொடர்புகளை ஏற்படுத்தி இருப்பதுடன், தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் மீது வான்வழித் தாக்குதல்களை நடாத்த வேண்டாம் எனவும் எம்மைக் கேட்டிருக்கின்றனர்.” இவ்வாறு புடின் கூறினார்.

மூலம்: Russia Today News

# எம்மை விட்டுப் பிரிந்தனர்!

## வீரபத்திரர் தியாகராசா

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி உருத்திரபுரத்தை புகுந்த இடமாகவும், இறுதிக்காலத்தில் கொழும்பு மாலபேயில் வசித்து வந்தவருமான தோழர் வீரபத்திரர் தியாகராசா நவம்பர் 04, 2015 அன்று தமது 80ஆவது வயதில் கொழும்பில் காலமானார்.

தோழர் தியாகராசா இளமைக் காலம் முதலே கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் தன்னை இணைத்துக் கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஒருவராவார். 1965இல் அவர் முதன்முதலாக உருத்திரபுரத்தில் அமைத்த புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான அகில இலங்கை விவசாயிகள் சங்க சம்மேளன கிளையே பிற்காலத்தில் கிளிநொச்சிப் பிரதேசத்தில் விவசாயிகள் இயக்கம் அகலக் களை பரப்பி வளர்வதற்கு அத்திபாரம் இட்டது.

அவருக்கு மனைவியும் ( உருத்திரபுரம் விவசாயிகள் சங்கத்தின் தலைவர் ஆ.கந்தையா – உக்குவளை கந்தையா – அவர்களின் புதல்வி), 6 பிள்ளைகளும் (ஒருவர் மரணித்துவிட்டார்) உண்டு.

தோழர் தியாகராசா அவர்களது பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு ‘வானவில்’ சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## வைத்தியநாதன் ஜெயநாதன்

யாழ்ப்பாணம் நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், இந்தியாவின் தமிழகத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட, ஓய்வுபெற்ற நில அளவையாளர் தோழர் வைத்தியநாதன் ஜெயநாதன் தமது 65ஆவது வயதில் நவம்பர் 04, 2015 அன்று இந்தியாவில் காலமானார்.

தோழர் ஜெயநாதன் 1960களில் நெடுந்தீவு இளைஞர்களை முற்போக்குத் திசை வழியில் அணி திரட்டிய நெடுந்தீவு முற்போக்கு வாலிபர் இயக்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவராவார்.


தோழர் ஜெயநாதனுக்கு மனைவியும், 6 பிள்ளைகளும் உண்டு.

அவரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ‘வானவில்’ சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முதலாளித்துவ ஜனநாயகம் என்பது சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் பற்றியும் கம்பீரமான வார்த்தைகளும் மிதமிஞ்சிய வாக்குறுதிகளும் ஆர்பாட்டமாக ஒலிக்கும் கோஷங்கள் அடங்கியதோர் ஜனநாயகம் ஆகும். ஆனால் அங்கே உண்மையில் பெண்களுக்கு சமத்துவமும் சுதந்திரமும் இருப்பதில்லை. மேலும் உழைக்கும் மக்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் சுதந்திரமும் சமத்துவமும் இல்லாதிருப்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

**- கார்ல் மார்க்ஸ்**

# இசை பற்றி இந்த மேதைகள் இவ்வாறு கூறியிருக்கிறார்கள்!



"நான் ஒரு விஞ்ஞானியாக இல்லாமல் இருந்தால், இசைக் கலைஞனாக இருந்திருப்பேன்... நான் அடிக்கடி இசையில் சிந்திக்கிறேன். என்னுடைய பகற் கனவுகளை இசைமயமாகக் காண்கின்றேன். என்னுடைய வாழ்க்கையை நான் இசையுடன்தான் தொடர்புபடுத்திப் பார்க்கினறேன். இசையின் மூலம்தான் நான் வாழ்க்கையில் அதிக சந்தோசத்தை அடைகின்றேன்."

**–மாபெரும் விஞ்ஞானி அல்பேர்ட் ஐன்ஸ்ரின்**

"இசைக்கு இளகாத மனிதன், அதன் இனிமைக்கு இசையாத மனிதன், துரோகத்துக்கும் கொள்ளைக்கும் துணை போவான். இருளில் அழுந்திய இதயம் அவனுடையது. இத்தகைய ஒருவன் மீது நம்பிக்கை வைக்கக்கூடாது."

**–மாபெரும் நாடகாசிரியர் வில்லியம் சேக்ஸ்பியர்**

"உலகம் வண்ணங்களால் என்னுடன் பேசுகிறது... என்னுடைய ஆன்மா இசையால் பதில் அளிக்கிறது".

**– இந்தியாவின் புகழ்மிக்க கவிஞர் ரவீந்திரநாத் தாகூர்**

"கட்டுப்பாட்டின் மூலம் எல்லையில்லாத சுதந்திரத்தைக் காண்பதுதான் இந்திய சாஸ்தீரிய இசையின் தத்துவம்."

**–சரோட் இசைக் கலைஞர் அம்ஜத் அலிகான்**

"இசைத் தாக்குதலின் ஒரு நல்ல அம்சம் என்னவென்றால், தாக்கப்பட்ட வலியே தெரியாது. அதனால்தான் என்னை இசையால் அடியுங்கள் என்கிறேன்"

**–பாப் மார்லி (Bob Marley)**

"பாட்டு என்பது பிரார்த்தனையின் மகள், பிரார்த்தனையே சமயத்தின் தோழி"

**–டா.சடோபிரான்ட் (Viscount Chateaubrant)**

"ராகம்தான் ராமனின் வில்....
ஏழு சுரங்கள் அந்த வில்லில் தொங்கும் மணிகள்.... மூன்று வகையான ராகங்கள் அந்த வில்லின் நாண்கள்.... தாளம்தான் வில்லிலிருந்து புறப்படும் அம்புகள்....."

**–தியாகராஜர் (தியாகய்யர்)**

"இசைப் படைப்பாளிகள் நாங்கள்.... கனவு காண்பவர்கள்.... தொலைந்து போன கடற்கரைகளில் திரிபவர்கள்... மறக்கப்பட்ட ஆறுகளுடன் நடப்பவர்கள்..... உலகத்தின் பார்வைக்குத் தோற்றுப் போனவர்கள்.... உலக ஆசையை ஜெயித்து விட்டவர்கள்... தேய்ந்த நிலவின் ஒளியில் நடப்பவர்கள்... பூமிப்பந்தை புரட்டுபவர்கள் நாங்கள்!"

**–ஆர்தர் ஓ ஸோக்நெஸ்ஸி (Arthur O'Shaughnessy)**

"துள்ளாத மனமும் துள்ளும்
சொல்லாத கதைகள் சொல்லும்
இல்லாத ஆசையைக் கிள்ளும்
இசை இன்பத் தேனையும் வெல்லும்"

**–மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**

"உங்க துப்பாக்கிக் குண்டு வெறும் சதையையும் எலும்பையும்தான் துளைக்கும்...ஆனா எங்க பாட்டோ மக்களின் மனங்களைத் துளைத்து உயிரை ஊடுருவி அதில் கலந்துவிடும்"

**–கம்யூனிஸ்ட் மேடைப் பாடகர் பாவலர் வரதராஜன் ஒருமுறை தமது இசை நிகழ்ச்சியைத் தடை செய்ய வந்த பொலிசாரிடம் கூறியது.**

- தொகுப்பு: தவம்

# மாணவர்களின் சீருடையிலும் அரசு கை வைக்கின்றது!

**இ**துவரை காலமும் இல்லாத அளவு தொகை நிதி கல்வித்துறைக்கு இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி பெருமை பேசியிருக்கிறார். ஆனால் மறுபக்கத்தில் மாணவர்களின் உரிமை மீது கைவைக்கும் வேலையை அரசு கனகச்சிதமாக மேற்கொண்டிருக்கிறது.

ஏற்கெனவே பாடசாலை மாணவர்களுக்கு வழங்கட்டு வந்த மதிய உணவை நிறுத்திய அரசாங்கம், தற்பொழுது அவர்களது சீருடையிலும் கைவைக்க முனைந்திருக்கிறது.

இதுவரை காலமும் உள்ளூர் உற்பத்தியாளர்களால் தரமான முறையில் தயாரிக்கப்பட்ட சீருடைகளை கல்வி அமைச்சு நாட்டிலுள்ள அத்தனை மாணவர்களுக்கும் பாரபட்சமின்றி வழங்கி வந்தது. அதன்மூலம், பெற்றோர்களின் பொருளாதாரச் சுமை நீங்கியதுடன், தகுந்த சீருடைத் துணி தேடி அலையும் அவலமும் இல்லாதிருந்தது.

ஆனால், இப்பொழுது அரசாங்கம் சீருடைத் துணி வழங்குவதற்குப் பதிலாக, அவர்களே துணியைத் தேடி வழங்குவதற்காக 'பண வவுச்சர்களை' வழங்குவதை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. இந்த நடவடிக்கை, எதிர்காலத்தில் சீருடை வாங்குவதற்கான வவுச்சர்களையும் இல்லாதொழிப்பதற்கான முன்னோடி நடவடிக்கையோ என, மாணவர்களும், பெற்றோர்களும், ஆசிரியர் சங்கங்களும் சந்தேகிக்கின்றன.

பண வவுச்சர்கள் வழங்குவதின் மூலம் எல்லா மாணவர்களும் ஒத்தமாதிரி சீருடையை வாங்குவார்கள் என எதிர்பார்க்க முடியாது. அத்துடன், துணி வாங்குவதற்காக மாணவர்களோ, பெற்றோர்களோ கடை கடையாக அலைய வேண்டியுமிருக்கும். வவுச்சர்கள் துஸ்பிரயோகம் செய்யப்படக்கூடிய சூழ்நிலைகளும் உருவாகும். அத்துடன் உள்ளூர் துணித் தயாரிப்பாளர்களின் உற்பத்தியும் பாதிக்கப்படும். ஏனெனில் அநேகமானோர் வெளிநாட்டுத் துணிகளை வாங்கவே விரும்புவர்.

அரசாங்கத்தின் இந்தச் செய்கை, வெறுமனே சீருடைத் துணி சம்பந்தமான

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

முன்பக்கத்தொடர்ச்சி…

நாட்டின் வெளிவிவகாரக் கொள்கை, நிதிக்கொள்கை, நிர்வாக நடைமுறை உட்பட நாட்டின் கட்டமைப்புகளில் அரசு பாரிய மாற்றங்களைச் செய்து வருகிறது. எப்படி 1977இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன (இன்றைய பிரதமர் ரணிலின் மாமனார்) திறந்த பொருளாதாரக் கொள்கையை உருவாக்கி இன்றுவரை அதை மாற்ற முடியாமல் வைத்திருக்கிறாரோ, அதேபோன்ற நடவடிக்கைகளில் இன்றையஅரசும் இறங்கியுள்ளது.

அரசின் இந்தவிதமான நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக நாட்டின் தொழிலாளி வர்க்கத்தின் மீதும் வைப்பதற்குத் தீர்மானித்துள்ளது. அதாவது, அவர்கள் ஓய்வு காலத்தில் நிதி பெறுவதற்காக உருவாக்கிய ஊழியர் சேமலாப நிதி (Employee's Provident Fund – EPF), ஊழியர் நம்பிக்கை நிதியம் (Employee's Trust Fund – ETF) என்பனவற்றில் கை வைக்க அரசு முயற்சிக்கின்றது.

இலங்கையில் அரச சேவையில் உள்ளவர்களுக்கு மட்டுமே அரசாங்க ஓய்வூதியம் உண்டு. அதனால்தான் "கோழி மேய்த்தாலும் கோண்மேந்திலை (அரசாங்கத்திலை) மேய்க்க வேண்டும்" என்ற சொலவடை கூட உருவானது. தனியார்துறை, கூட்டுத்தாபனங்கள், சபைகள், பெருந்தோட்டத்துறை, வங்கிகள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றில் பணி புரிபவர்களுக்கு அரச ஓய்வூதியம் கிடையாது. அவர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் ஓய்வுபெறும் போது, அவர்களது சம்பளத்தில் இருந்தும், தொழில் வழங்குநரின் நிதி செலுத்துகையிலிருந்தும் EPF/ETF என்பனவற்றுக்கு மாதாமாதம் செலுத்தப்படும் பணத்தின் மொத்தத் திரட்சி ஒருதொகைப் பணமாக இறுதிக் காலத்தில் வழங்கப்படுவது வழமை.

இந்தப் பணம் ஒவ்வொரு ஊழியரதும் தனிப்பட்ட பெயரில் மத்திய வங்கியில் வைக்கப்பட்டிருக்கும். தற்போது இரு நிதியங்களினதும் மொத்தத் தொகையான 1700 கோடி (1.7 Trillion) ரூபா மத்திய வங்கியில் உள்ளது. அந்தப் பணத்தை எடுத்து இரு நிதியங்களையும் ஒன்றாக்கி, தேசிய ஓய்வூதியத் திட்டம் ஒன்றை உருவாக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அத்துடன் இந்த நிதியை மத்திய வங்கியிடமிருந்து எடுத்து தனியார் நிறுவனங்களிடம் கையளிக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கான அபாய அறிவிப்பை 2015 நொவம்பர் 5ஆம் திகதி தற்போதைய அரசாங்கத்தின் இடைக்காலப் பொருளாதாரக் கொள்கை சம்பந்தமான அறிக்கையை நாடாளுமன்றத்தில் வெளியிட்டு வைத்துப் பேசும்போது பிரதமர் ரணில் விக்கிமசிங்க வெளியிட்டார்.

இந்தத் திட்டம் தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கும், அவர்களது பணத்தைச் சூறையாடும், பகற்கொள்ளைத் திட்டமாகும். இதன் மூலம் தனிப்பட்ட முதலாளிகளின் வளர்ச்சிக்கு தொழிலாளர்களின் பணத்தைக் கைமாற்றிக் கொடுப்பதற்கு இன்றைய தொழிலாளர் விரோத, தரகு முதலாளித்துவ அரசாங்கம் முயற்சிக்கின்றது.

தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதானால், அதை அரசாங்கம் தனது பணத்தில் வழங்கட்டும். சோசலிச நாடுகளிலும், வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும், ஒரு குறிப்பிட்ட வயதை அடைந்த முதியோர் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அமுலில் இருக்கின்றது. அப்படி இலங்கை அரசும் செய்யட்டும்.

அதைவிடுத்து, "வழியில் தேங்காயை எடுத்து தெருவில் பிள்ளையாருக்கு அடித்த" கதையாக, தொழிலாளர்களின் பணத்தைப் பறித்து அவர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் உருவாக்குவது என்பது ஒரு பெரும் மோசடியாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் எப்பொழுதும் தொழிலாளி வர்க்கத்தினதும், பொதுமக்களினதும் வயிற்றில் அடிப்பது ஒரு வழமையாக இருந்து வருகிறது. ஆனால் இம்முறை 'தேசிய அரசாங்கம்' என்ற போர்வையில் ஐ.தே.கவும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவும் சேர்ந்து அமைத்த அரசில் இந்த தொழிலாளர் விரோத நடவடிக்கை அரங்கேற்றப்படுகிறது. ஐ.தே.கவின் இந்த தொழிலாள விரோத நடவடிக்கைக்கு சிறீ.ல.சு.கட்சி ஒத்துழைப்பது, அக்கட்சி தொழிலாளி வர்க்கத்துக்குச் செய்யும் துரோகமாகும்.

ஏனெனில், 1948இல் சுதந்திரம் பெற்ற பின்னர், 1956 வரை பதவியில் இருந்த ஐ.தே.க. அரசுகள் எதுவும் தொழிலாளி வர்க்கத்துக்கு எவ்விதமான நன்மையையும் செய்யாதது மட்டுமின்றி, அவர்களை அடக்கியொடுக்கி, சுரண்டிச் சூறையாடியும் வந்ததுதான் வரலாறு.

1956இல் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க தலைமையில் மக்கள் ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்த பின்னரே, தொழிலாளர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. அவரது அரசாங்கமே இடதுசாரி கட்சிகள் நீண்டகாலமாக முன்வைத்து வந்த கோரிக்கைகளை ஏற்று, தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை, வேலை நிறுத்தம் செய்யும் உரிமை, 8 மணி நேர வேலை, வேலை உத்தரவாதம், சம்பள நிர்ணய சபை மூலம் அடிப்படைச் சம்பள நிர்ணயம், பெண்களுக்கு பிரசவ விடுமுறை, காப்புறுதித் திட்டம், மேதினத்துக்கும் விசேட நாட்களுக்கும் விடுமுறை, தொழில் பிணக்குகளைத் தீர்க்க தனியான தொழில் நீதிமன்றம் என்பனவற்றுடன், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பனவும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

அந்த உரிமைகளிலேயே இன்றைய தொழிலாளர் விரோத அரசு கைவைக்கத் தீர்மானித்துள்ளது. அதற்கு பண்டாரநாயக்கவால் உருவாக்கப்பட்ட சிறீ.ல.சு.கட்சியின் ஒரு பிரிவினரும் – அவரது மகள் சந்திரிக குமாரதுங்க உட்பட — ஆதரவளிக்க முன்வந்திருப்பது, தொழிலாள வர்க்கத்துக்கு மட்டுமின்றி, பண்டாரநாயக்கவுக்கும் செய்யும் துரோகமாகும்.

எனவே, இந்தத் தொழிலாளர் விரோத நடவடிக்கையை எதிர்த்து முறியடித்து, அவர்களது உரிமையைப் பாதுகாப்பதற்கு, தொழிலாள வர்க்கத்தின அனைத்துப் பிரிவுகளும், இன மத மொழி பேதமின்றி. அரசியல் தொழிற்சங்க பேதமின்றி ஓரணியில் திரண்டு நின்று, தமது புரட்சிகர வர்க்க உணர்வை வெளிப்படுத்த வேண்டும். தொழிலாளி வர்க்கத்துக்கு இழப்பதற்கு எதுவுமில்லை. ஆனால் வெல்வதற்கு எவ்வளவோ தேவைகளும் விடயங்களும் இருக்கின்றன. *

14ம் பக்கத்தொடர்ச்சி…

பிரச்சினை மட்டும் என்று கருதிவிட முடியாது. எதிர்காலத்தில் இலவசக் கல்வியையே இல்லாதொழித்து, கல்வியை தனியார்மயப்படுத்தி, அதை ஒரு சந்தை வியாபாரப் பொருளாக்கும் திட்டம் எனச் சந்தேகிப்பதற்கு இடமிருக்கிறது.

எனவே, அரசாங்கம் மாணவர்கள் மீது மேற்கொண்டுள்ள இந்த விசப்பரீட்சைக்கு எதிராக, மாணவர்களும், பெற்றோர்களும், ஆசிரியர்களும் ஒன்றிணைந்து போராடி, இந்தத் திட்டத்தை மீளப் பெற வைப்பது அவசியமானது. *

# கை குலுக்குவோம் கனடாவுக்கு!

கனடா நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் அமோக வெற்றி பெற்றுள்ள லிபரல் கட்சியின் இளம் தலைவர் ஜஸ்ரின் ரூடோ உலகின் கவனத்தை ஈர்ப்பவராக மாறியிருக்கிறார்.

மொத்தம் 338 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் ஜஸ்ரின் ரூடோவின் லிபரல் கட்சிக்கு 184 இடங்கள் கிடைத்திருக்கின்றன. தொடர்ந்து 10 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த கன்சர்வேடிவ் கட்சிக்கு 99 இடங்கள் கிடைத்துள்ளன. மற்றொரு முக்கியக் கட்சியான நியு டெமாக்ரட்ஸ் என்கிற இடதுசாரிக் கட்சிக்கு 44 தொகுதிகள் கிடைத்துள்ளன. இந்தத் தேர்தலில் லிபரல் கட்சி வெற்றி பெறும் என்பது முன்னரே கணிக்கப்பட்டிருந்தாலும், இந்த அளவுக்குத் தெளிவாக, அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி கிடைக்கும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. 2011 பொதுத் தேர்தலில் லிபரல் கட்சி படுமோசமான தோல்வியைச் சந்தித்த பிறகு, ஜஸ்ரின் ரூடோ கட்சித் தலைவர் பதவியில் அமர்ந்தார்.

கன்சர்வேடிவ் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ஸ்டீபன் ஹார்ப்பர் ஆட்சியின் தொடக்கக் காலம், அவருடைய பொருளாதார நிர்வாகத்துக்காகப் பாராட்டப்பட்டது. போகப்போக ஆட்சி நீர்த்துப்போனது. அரசின் செலவைக் கட்டுப்படுத்துகிறேன் என்று கூறிக்கொண்டு, பொதுமக்களின் நன்மைகளுக்கான நலத் திட்டங்களில் கை வைத்தார். அதனால், மக்களிடையே அதிருப்தி அதிகரித்தது. அது மட்டுமல்லாமல் மத விஷயங்களில் அநாவசியமாகத்



தலையிட்டு சிறுபான்மை மக்களுடைய அதிருப்தியையும் வெறுப்பையும் சம்பாதித்தார். அவரை ஆதரித்த நடுத்தர வகுப்பினரே அவருடைய செயல்களால் அதிருப்தியுற்றனர். ஹார்ப்பரின் ஆதரவாளர்கள் இந்தப் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் தேர்தலில் அதிகம் பேசவில்லை. மக்களுடைய கவனம் அவற்றில் திரும்பிவிடாமல் இருக்க, "எதிர்த்து நிற்கும் ஜஸ்ரின் ரூடோஇளையவர், அரசியல் அனுபவம் இல்லாதவர், அவருக்கு வாக்களித்தால் வாரிசு அரசியலுக்கு நடைபாவாடை விரித்ததாக அர்த்தம்" என்றெல்லாம் அரசியலற்ற விஷயங்களைப் பிதற்றினர்.

ஜஸ்ரின் ரூடோ இளையவர் என்றாலும், விவேகமாகத் தேர்தல் பிரச்சாரத்தில் பேசினார். முக்கியமாக, தான் ஆட்சிக்கு வந்தால் என்னென்ன நடக்கும் என்று பேசினார். கனடா இழந்த மாண்பை மீட்பேன், மக்களுக்கு வலுவான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைக் கொண்டுவருவேன் என்றார். மகளிர் நலனில் தனக்குள்ள அக்கறையை வெளிப்படையாகப் பேசினார். கடுமையான சட்டங்கள் இரத்துச் செய்யப்படும் என்று உறுதியளித்தார். மக்களை ஆக்கபூர்வப் பிரச்சாரங்கள் ஈர்த்தன. ஒரு கட்டத்தில் கன்சர்வேடிவ்காரர்கள் தங்களுடைய பிரச்சார உத்தியைத் தனிப்பட்ட தாக்குதலாக மாற்றினர். "இவர் பியரி எலியட் ரூடோவின் மகன், வாரிசு அரசியலுக்கு வாக்களிக்காதீர்கள்" என்றனர். முன்னாள் பிரதமரான பியரி எலியட் ரூடோ 10 ஆண்டுகளுக்கும் மேல் ஆட்சி செய்தவர் என்பதோடு, நல்லாட்சியும் கொடுத்தவர் என்பதால் அந்தப் பிரச்சாரமும் எடுபடாமல் போனது. வெற்றி ஜஸ்ரின் ரூடோவைத் தேடி வந்தது.

ஆட்சியில் அமர்ந்த ஜஸ்டின் ட்ரூடு தன்னுடைய அமைச்சரவையில் சரிபாதியைப் பெண்களுக்கு ஒதுக்கியிருக்கிறார். மேலும், சிறுபான்மைச் சமூகங்களுக்கும் உரிய பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கிறார். பெரும்பாலான இலாகாக்கள் அந்தத் துறையோடு ஈடுபாடுள்ளவர்களாகப் பார்த்து ஒதுக்கியிருக்கிறார். இப்போது கனடா மக்களிடையே ஏராளமான எதிர்பார்ப்புகள் உருவாகிவிட்டன. கனடா பொருளாதாரத்துக்குப் புத்துயிர் ஊட்டுவதுடன் நாட்டு மக்களிடையே அதிகரித்துவரும் ஏற்றத் தாழ்வுகளைப் போக்க வேண்டிய முக்கியமான கடமையும் ஜஸ்டின் ரூடோவுக்கு இருக்கிறது. தேவையற்ற தலையீடுகளிலிருந்து கனடாவின் கவனத்தைத் திருப்பி, எல்லோருக்குமான வளர்ச்சி நோக்கி சுக்கான் திருப்பப்படும் என்று ஜஸ்ரின் ரூடோ கூறியிருக்கிறார். நல்லது நடக்கட்டும்!

நன்றி: இந்து, திகதி: 14-11-2015

இன்றைய மனித சமூகத்தின் கேடுகளுக்கு உண்மையான மூல காரணம் இன்றைக்கு நிலவுகின்ற முதலாளித்துவ சமுதாயத்தின் பொருளாதார அராஜகமே என்பது என்னுடைய கருத்தாகும். உற்பத்தி சாதனங்கள் அனைத்தும் அதாவது, நுகர்வுப் பண்டங்களையும் அதோடுகூட மூலதனப் பண்டங்களையும் உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஒட்டுமொத்த உற்பத்தி சக்தி அனைத்தும் சட்ட ரீதியாகவே தனிநபர்களின் தனிச்சொத்தாக இருக்கின்றன.

**- அல்பேர்ட் ஐன்ஸ்ரைன்**